(எட்டாவது பாராளுமன்றம் -மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 49.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 மார்ச் 29, வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சர்

**கௌரவ நவின் திசாநாயக்க,** பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ இரான் விக்கிரமரத்ன,** நிதி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வடிவேல் சுரேஷ்,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (டாக்டர்) (திருமதி) அனோமா கமகே,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ மஹிந்த அமரவீர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ டலஸ் அழகப்பெரும**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ பியசேன கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ தயாசிறி ஜயசேகர**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ வீரகுமார திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

**கௌரவ எஸ். பீ. நாவின்ன**

**கௌரவ மனுஷ நாணாயக்கார**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ முஹம்மது நசீர்**

**கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண**

**கௌரவ கே.கே. பியதாஸ**

**கௌரவ சுசந்த புஞ்சிநிலமே**

**கௌரவ சனத் நிசாந்த பெரேரா**

**கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா**

**கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர**

**கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த**

**கௌரவ பாலித ரங்கே பண்டார**

**கௌரவ இந்திக பண்டாரநாயக்க**

**கௌரவ பந்துல லால் பண்டாரிகொட**

**கௌரவ தாராநாத் பஸ்நாயக்க**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே**

**கௌரவ பைஸர் முஸ்தபா**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா**

**கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ பிரசன்ன ரணதுங்க**

**கௌரவ பிரசன்ன ரணவீர**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ மஹிந்த சமரசிங்க**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய**

**கௌரவ திலங்க சுமதிபால**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வசந்த சேணாநாயக்க**

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன**

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ மாவை சோ. சேனாதிராசா**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா**

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 சனவரி 03 ஆம் திகதிய 2104/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 01 ஆம் திகதிய 2108/65 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 07 ஆம் திகதிய 2109/15 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 08 ஆம் திகதிய 2109/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி மற்றும் வெகுசன அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 24 ஆம் திகதிய 2111/58 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீடு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 மார்ச் 02 ஆம் திகதிய 2112/48 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, அந்நியச் செலவாணி சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2019 பெப்ரவரி 28 ஆம் திகதிய 2112/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதி; மற்றும்

(viii) (அத்தியாயம் 235) சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இறக்குமதித் தீர்வைக் கட்டணங்கள் தொடர்பான தீர்மானம்

(2019 மார்ச் 5 ஆம் திகதிய 2113/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை )

இக்கட்டளைகள், ஒழுங்குவிதி மற்றும் தீர்மானம் ஆகியவற்றை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 14 ஆம் திகதிய 2084/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**2. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல் :** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அரசாங்க நிதி பற்றிய குழுவினால் தொகுக்கப்பட்ட, “2019 வரவுசெலவுத் திட்டத்தின் அரசாங்க நிதி, அரசிறை மற்றும் பொருளாதார ஊகங்கள் பற்றிய மதிப்பீடு” தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**3. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

மொரொன்துடுவ, மஹகோனதுவ, இல. 110 இல் வதியும் திருமதி கே. ஆரியவதி பீரிஸினது 2017.11.11 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் பி. பெரேரா சமர்ப்பித்தார்.

மேற்படி மனு 30 (10) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**4. *சிறப்புரிமைக் கேள்விகள்:*** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா அவர்கள், தனது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக 2019 மார்ச் 27 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய விடயம், 118 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**5. ஒதுக்கீட்டுச் சட்டமூலம்** — (ஒதுக்கப்பட்ட இருபதாவது நாள்): குழுவில் மேலும் பரிசீலிக்கப்பட்டது.

(குழுவில்)

பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.

தலைப்பு 117

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

“நிகழ்ச்சித்திட்டம் 10/- ரூபாவினால் குறைக்கப்படுமாக” என கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே பிரேரித்தார்.

(மு.ப. 11.38 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

(பி.ப 1.00 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 2.03 மணிக்கு கௌரவ வேலுகுமார் தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.12 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

(பி.ப. 3.41 மணிக்கு கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.23 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

((பி.ப. 6.39 மணிக்கு சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு நிராகரிக்கப்பட்டது.

117 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 379,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு பாராளுமன்றமானது பிரேரணைக்குச் சார்பாக 84 பேரும்; எதிராக ஒருவரும் (01) என வாக்களித்து பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) (ஆ) இன் பிரகாரம் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறையினைப் பயன்படுத்தி 80 (எண்பது) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் பின்வருமாறு வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்.

| | |
|---|---|
| O 018. Mavai S. Senathirajah | Yes |
| O 021. Selvam Adaikkalanathan | Yes |
| O 084. Ananda Aluthgamage | No |
| O 099. Gnanamuthu Srineshan | Yes |
| G 001. Rauff Hakeem | Yes |
| G 002. Mangala Samaraweera | Yes |
| G 004. John Amaratunga | Yes |
| G 005. Gayantha Karunatileka | Yes |
| G 006. Lakshman Kiriella | Yes |
| G 009. Tilak Marapana | Yes |
| G 010. Wajira Abeywardana | Yes |
| G 011. Ravi Karunanayake | Yes |
| G 012. Rajitha Senaratne | Yes |
| G 014. Patali Champika Ranawaka | Yes |
| G 015. Kabir Hashim | Yes |
| G 017. Akila Viraj Kariyawasam | Yes |
| G 018. Malik Samarawickrama | Yes |
| G 019. Mano Ganesan | Yes |
| G 021. J.M. Ananda Kumarasiri | Yes |
| G 022. P. Harrison | Yes |
| G 023. R.M. Ranjith Madduma Bandara | Yes |
| G 024. Arjuna Ranatunga | Yes |
| G 026. Chandrani Bandara | Yes |
| G 027. Thalatha Atukorale | Yes |
| G 028. Abdul Haleem | Yes |
| G 031. Daya Gamage | Yes |
| G 033. Sujeewa Senasinghe | Yes |
| G 034. Harsha De Silva | Yes |
| G 035. Ajith P. Perera | Yes |
| G 036. V. Radhakrishnan | Yes |
| G 037. Ruwan Wijayawardene | Yes |
| G 038. Lucky Jayawardana | Yes |

| | |
|---|---|
| G 042. A.D. Premadasa | Yes |
| G 043. Wasantha Aluwihare | Yes |
| G 044. Vijayakala Maheswaran | Yes |
| G 045. Eran Wickramaratne | Yes |
| G 047. J.C. Alawathuwala | Yes |
| G 050. Ranjan Ramanayake | Yes |
| G 051. Ashok Abeysinghe | Yes |
| G 052. H.M.M. Harees | Yes |
| G 053. Seyed Ali Zahir Moulana | Yes |
| G 054. Ajith Mannapperuma | Yes |
| G 055. Edward Gunasekara | Yes |
| G 056. Anoma Gamage | Yes |
| G 057. Karunarathna Paranawithana | Yes |
| G 059. Nalin Bandara Jayamaha | Yes |
| G 064. Lakshman Senewiratne | Yes |
| G 065. Wijith Wijayamuni Zoysa | Yes |
| G 066. D.M. Swaminathan | Yes |
| G 068. Vasantha Senanayake | Yes |
| G 070. Palitha Range Bandara | Yes |
| G 071. M.S. Thowfeek | Yes |
| G 072. Manusha Nanayakkara | Yes |
| G 073. Sirinal de Mel | Yes |
| G 074. Anura Sidney Jayarathne | Yes |
| G 076. Lakshman Ananda Wijemanne | Yes |
| G 077. A. A. Wijethunga | Yes |
| G 078. Hector Appuhamy | Yes |
| G 081. A. Aravindh Kumar | Yes |
| G 082. Velu Kumar | Yes |
| G 083. Nalaka Prasad Colonne | Yes |
| G 084. Chandima Gamage | Yes |
| G 085. Kavinda Heshan Jayawardana | Yes |
| G 086. Mylvaganam Thilakarajah | Yes |
| G 088. Sujith Sanjaya Perera | Yes |
| G 089. Hirunika Premachandra | Yes |
| G 090. Bandula Lal Bandarigoda | Yes |
| G 091. M. Ibrahim Muhammad Mansoor | Yes |
| G 093. Imran Maharoof | Yes |
| G 094. Ishak Rahuman | Yes |
| G 095. Mujibur Rahuman | Yes |
| G 096. Harshana Rajakaruna | Yes |
| G 097. Thusitha Wijemanna | Yes |

| | |
|---|---|
| G 099. Chaminda Wijesiri | Yes |
| G 100. Hesha Withanage | Yes |
| G 101. Sandith Samarasinghe | Yes |
| G 103. Wijepala Hettiarachchi | Yes |
| G 104. Ashu Marasinghe | Yes |
| G 106. Mohamadu Nazeer | Yes |
| G 107. S.M. Mohamed Ismail | Yes |

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 47 (2) இ) இன் பிரகாரம் செயலாளர் நாயகம் பின்வரும் பெயர்களைக் கேட்பதன் மூலம் பின்வரும் 05 கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப்பினை மேற்கொண்டுள்ளனர்.

| | |
|---|---|
| G 003. Gamini Jayawickrama Perera | Yes |
| G 069. Field Marshal Sarath Fonseka | Yes |
| G 062. A. H. M. Fowzie | Yes |
| G 049. Faizal Cassim | Yes |
| G 075. K. K. Piyadasa | Yes |

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

117 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 22,300,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

117 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 90,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

117 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 175,042,700,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தலைப்பு 119

நிகழ்ச்சித்திட்டம் 01 (மீண்டுவரும் செலவினம்)

119 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 292,465,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது

நிகழ்ச்சித்திட்டம் 01 (மூலதனச் செலவினம்)

119 ஆம் தலைப்பின் 01 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 8,500,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மீண்டுவரும் செலவினம்)

119 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மீண்டுவருஞ் செலவுக்கென ரூபா 270,000,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சித்திட்டம் 02 (மூலதனச் செலவினம்)

119 ஆம் தலைப்பின் 02 ஆம் நிகழ்ச்சித் திட்டம் — மூலதனச் செலவுக்கென ரூபா 575,600,000 அட்டவணையில் சேர்க்கப்பட வேண்டுமென்ற பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 7.06 மணிக்கு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக தவிசாளர் ஆசனத்தை விட்டகன்றார்.

குழு செய்து முடித்த பரிசீலனை பற்றி அறிவிக்கப்பட்டது. 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி திங்கட்கிழமை குழு மீண்டும் கூடும்.

**6 இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் (2015),** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் சார்பாக அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை ,— 1988 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க இலங்கை கொள்கைக் கற்கைகள் நிறுவகச் 1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தபானச் சட்டத்தின் 32(3) ஆம் பிரிவிற்கமைய 2018.05.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2015.12.31 ஆம் திகதியுடன் முடிவடைந்த வருடத்துக்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் அவதானிப்புகள் உள்ளடங்கலான இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கை மற்றும் கணக்குகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை குழுவுக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. இலங்கையில் தேசிய மதிப்பீட்டு ஆற்றல்களை உறுதிப்படுத்துவதற்கு ஆய்வுகளை மேற்கொண்டு அதன் விதப்புரைகளை பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கான பாராளுமன்ற விசேட குழு:** அரசதொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது அதன் A/RES/69/237 ஆம் இலக்க ' *நாட்டு மட்டத்தில் அபிவிருத்திச் செற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்கான ஆற்றல்களைக் கட்டியெழுப்புதல்'* என்ற தீர்மானத்தின் மூலம் அபிவிருத்திச் செயற்பாடுகளின் மதிப்பீட்டிற்காக நாடுகளின் ஆற்றல்களைக் கட்டியெழுப்புவதில் 2015 ஆம் வருடத்தை சர்வதேச மதிப்பீட்டு வருடமாக பிரகடனப்படுத்தியுள்ளதாலும்;

மதிப்பீட்டிற்கான பூகோள பாராளுமன்ற உறுப்பினர்களின் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட "பொறுப்பான பாராளுமன்றங்கள்: 2030 நிகழ்ச்சி நிரலுக்காக மதிப்பீட்டை ஏற்றுக்கொள்ளல்" என்ற தலைப்பிலான மாநாட்டில் ' EvalColombo 2018' இல் 2018 செப்டம்பர் 17 ஆம் திகதி பிரதம அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தின் அமைச்சரவையினால் தேசிய மதிப்பீட்டுக் கொள்கை (NEP) ஏற்றுக்கொள்ளப்பட்டதனாலும்;

தேசிய மதிப்பீட்டுக் கொள்கைகள் மற்றும் பொறிமுறை ஆகியன தாபிக்கப்படுவதற்கு வசதியளிப்பதற்காக வழிகாட்டல்களை வழங்கக் கூடிய இயலுமான சூழலை உருவாக்குவதற்கு, 2018 செப்டம்பர் 18 இல் இலங்கை பராளுமன்றத்தில் கைச்சாத்திடப்பட்ட கொழும்பு பிரகடனத்தில் அர்ப்பணிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதனாலும்;

இலங்கை கையொப்பமிட்டுள்ள, ஐக்கிய நாடுகளினால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் எனும் சூழமைவில் மதிப்பீடு முக்கியமானதாக மாறியுள்ள காரணத்தினாலும்;

மதிப்பீட்டின் விதிகள் மற்றும் அளவுகோல்கள் மீது சகல உலகளாவிய பங்காளர்களும் கொடையாளர்களும் அவர்களின் சகல கருத்திட்டங்களையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் வரையறை செய்துள்ள காரணத்தினாலும்;

இலங்கைப் பாராளுமன்றம் பிரதிச் சபாநாயகரின் தலைமையிலான மதிப்பீட்டிற்கான இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் மன்றின் கலந்துரையாடல்கள் மூலம் சான்றடிப்படையிலான சட்டமியற்றல், வரவு - செலவுத்திட்ட தயாரிப்பு மற்றும் மேற்பார்வைச் செயற்பாடுகள் ஆகியவற்றிற்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டுப் பொறிமுறையின் பொருத்தப்பாடு மற்றும் தேவை ஆகியவற்றினை அடையாளங்கண்டு அங்கீகரித்துள்ள காரணத்தினாலும்;

அரசியலமைப்பின் உறுப்புரை 148 இன் பிரகாரம், பாராளுமன்ற நடவடிக்கைமுறை களினூடாக நாட்டின் தேசிய அபிவிருத்தி முன்னெடுப்பு பற்றிய பகிரங்க நிதி மற்றும் வரவு செலவுத்திட்டத் தயாரிப்பு மீதான தத்துவம் பாராளுமன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டுள்ளதாலும்;

மதிப்பீட்டின் ஊடாக செயற்திறன் வாய்ந்த முன்னெடுப்புகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிந்திருக்க வேண்டுமென்பதனாலும்;

இலங்கையில் தேசிய மதிப்பீட்டு ஆற்றலைக் கட்டியெழுப்புவதை உறுதிசெய்வதற்காக பின்வருவன தொடர்பில் ஆராய்ந்து விதப்புரைகளை மேற்கொள்வதற்குப் பாராளுமன்ற விசேடகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது:-

(அ) சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுகள் மற்றும் முகவராண்மைகளுடன் ஆலோசித்து தேசிய கொள்கைகளை வகுத்தலும் சட்டங்களை இயற்றுதலும்;

(ஆ) நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களையும் முகவராண்மைகளையும் தேசிய, மாகாண மற்றும் உள்ளூர் மட்டங்களில் வழிகாட்டுதலும் ஒருங்கிணைத்தலும்;

(இ) மதிப்பீட்டுக் கலாசாரம் ஒன்றை மேம்படுத்துவதில் அரசாங்க - தனியார் பங்காண்மையை ஊக்குவித்தல்;

(ஈ) ஊழல், தவறான முகாமைத்துவம் மற்றும் வீண்விரயத்தைத் தவிர்க்கும் அதேவேளை, மதிப்பீடுகள் மூலமாக நல்லாட்சி மற்றும் தகவலறிந்த தீர்மானம் மேற்கொள்ளுதலின் விழுமியங்களை மேம்படுத்துதல்;

(உ) போதியளவு உள்நாட்டு வளங்களை ஒதுக்கீடு செய்தலும் சர்வதேச நிதியிடும் வளங்களைக் கண்டறிதலும்;

(ஊ) நாடுகளுக்கு இடையிலான துறைசார்ந்த நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் பிராந்திய மற்றும் அனைத்துலக மட்டங்களில் பகிர்ந்துகொள்ளுதல்;

(எ) பாராளுமன்றத்தின் தற்போதுள்ள மேற்பார்வைப் பொறிமுறையின் வெளியீடுகள் மற்றும் விளைவுகளை முக்கியமாக அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (COPA) மற்றும் அரசாங்கப் பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் (COPE) பணிகளை மதிப்பீட்டின் மூலம் பரிசீலித்தல்;

(ஏ) மதிப்பீட்டிற்கென சட்டவாக்க நிலையியற் குழுவொன்றை ஏற்படுத்தல்;

(ஐ) பாராளுமன்றத்தின் சட்டவாக்க மற்றும் மேற்பார்வைப் பணிகளுக்கு வசதியளிப்பதற்கு, பாராளுமன்றத்தின் ஆராய்ச்சிப் பிரிவினது பணிகளை “ *பாராளுமன்ற ஆராய்ச்சி மற்றும் மதிப்பீட்டுப் பிரிவு*” இற்கு விரிவுபடுத்தல்;

(ஒ) தேசிய மதிப்பீட்டு ஆற்றலை ஒழுங்குபடுத்தி ஒருங்கிணைப்புச் செய்வதற்கு தேசிய அமைப்பொன்றை நிறுவுதல்;

(ஓ) புலமையாளர்கள், அபிவிருத்தி மற்றும் மதிப்பீட்டுத் துறைகளில் தொழில் புரிபவர்களைக் கொண்டமைந்த நிபுணர் குழு ஒன்றையும் வலையமைப்புகளையும் தாபித்தல்; அத்துடன்

(ஔ) மேற்சொன்ன விடயப்பரப்புகளுடன் தொடர்புடைய அல்லது இடைநேர் விளைவான அனைத்து விடயங்களினதும் பரிசீலனை.

2. (அ) குழு மற்றும் அதன் தவிசாளர் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும்

(ஆ) 101 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பன்னிரண்டிற்கு (12) மேற்படாத உறுப்பினர்களைக் குழு கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள் மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், பாராளுமன்றத்தின் முன் அல்லது குறித்த குழுவின் முன் தோன்றி அத்தகைய ஆளின் உடைமையில் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் உள்ள ஏதேனும் பத்திரம், புத்தகம், பதிவேடு அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு எந்தவோர் ஆளுக்கும் பணிப்பு விடுப்பதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் அல்லது உரிய நோக்கத்திற்காகக் குறித்துரைக்கப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட ஆளினால் சாட்சிகளை வாய்மூலம் விசாரணை மேற்கொண்டு உண்மை நிலையை வெளிப்படுத்துவதற்கும் அல்லது வேறு விதத்தில் ஆராய்ந்து பார்ப்பதற்கும் சத்தியம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) பாராளுமன்றத்திற்கு வெளியே, நாட்டின் ஏதேனும் பகுதிகளில், கூட்டங்களை நடத்துவதற்கும்;

(உ) குழுவுக்கு உதவி வழங்குவதற்காக தொடர்புடைய துறைகளில் சிறப்பறிஞர்கள் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(ஊ) பாராளுமன்றத்தின் ஏதும் ஒத்திவைப்பினால் தடைபெறாது காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் கூடுவதற்கும்;

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்திற்குள் அல்லது பாராளுமன்றத்தால் வழங்கப்படக்கூடிய அத்தகைய வேறு அல்லது மேலதிக காலப்பகுதிக்குள் அதன் அறிக்கையை சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. ஒத்திவைப்பு (தொழில்வாய்ப்புக்களில் வெளிவாரிப் பட்டதாரிகள் புறக்கணிக்கப்படல்)** : "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்குவாராக" என அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 7.07மணிக்கு கௌரவ முஜிபுர் ரஹுமான் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் பி.ப. 7.24 மணிக்கு, அதன் 2019 மார்ச் 09 ஆம் திகதிய சபைத் தீர்மானத்திற்கிணங்க 2019 ஏப்ரல் 01 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.